**தலைப்பு: 312 – மேல் மாகாண சபை**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1. செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடுகள்

### (அ) செயற்பணி

நிதி, பௌதீக மற்றும் மனித வளத்தை மிக திறமையாக ஈடுபடுத்தி சகல சமூகத்தினருக்கும் நன்மை பயக்கும் சமாதானம் மற்றும் சுகவாழ்வு நிறைந்த நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

### (ஆ) பிரதான செயற்பாடுகள்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தினால் மாகாண சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பில் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 12,057,251,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 9,691,181,000 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 2,366,070,000 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 19.62 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவின வகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 9,011,251,000 | 9,240,251,000 | 8,893,771,000 | 346,480,000 | 3.75 |
| மூலதனம் | 2,417,000,000 | 2,817,000,000 | 797,410,000 | 2,019,590,000 | 71.69 |
| மொத்தம் | 11,428,251,000 | 12,057,251,000 | 9,691,181,000 | 2,366,070,000 | 19.62 |